# E.C.C.T. CFS

தருமமிகுச் சென்னையிலே, தரணிபுகழ்ச் சீமையிலே,
கருமமாய் ஏற்றுமதி இறக்குமதி செயல்நிலைகள்!
உரிமம்தனை வழங்கி, வழிநடத்தும் சுங்கத்துறை!
பரிவட்டம் கண்டார்போல் பணியகங்கள் பலநிறைய;

உரிமைசீர் சுங்கம்தான் தன்னுரிமை இழந்ததுவோ!
கருமந்தான் செய்திடுவோர் தன்கடமைத் தான்மறந்தார்!
உரிமம்செய் சுங்கத்தின் இயன்நிலையை அறியாரோ!
வணிகத்தின் உயிர்நிலையைச் சுங்கம்தான் செயல்படுத்தும்;

இந்நிலையில் சுங்கத்தின்  கேண்மைதனை ஏன்மறந்தார்?
அந்நிலையில் சேருமிந்த சீர்மிகு "பிரிட்டோ"வின் ECCT!
தந்திரம்சேர் வித்தைகளைத் தினம்தேடும் நிலையாகும்;
கணினியிலேச் செயல்படவே நாளும் போராட்டம்!

ஒருகோப்பு நகர்ந்திடவே ஓர்நாழிகைப் பிடிக்கும்;
அவ்வபோது இற்றுவிடும்; இறைவனுக்கே நிலைதெரியும்!
ஆயிரமாய்க் கதைசொல்வர்; யாமம்வரை செயல்படுவோம்!
இருக்கையதோ ஏளனமாய் எமைப் பார்க்கும்!

எட்டிப்பார்க்கும் முகவர்களோ அறிவழிப்பர் நாளும்!
கொட்டமாய்ச் சிறுகூண்டு, கையளவேச் சிறுமேசை;
முட்டமாய்க் கோப்புகளோ என்முகம் தேடும்!
ஏற்றமாய் ஒன்றுண்டு அதுவேக் 'கழிப்பறை'யாம்;

கழிப்புகள் நிறைந்தார்போல், கறைபடிந்த முழுயிடமும்;
நாய்கூடக் கழிக்க மறுக்கும்; கோலமிகுத்  'திண்டிவன'
விரைவுப்பேருந்துக் கழிவறையும் தோற்றுப் போகும்!
வரைகொண்டுச் சொன்னாலும் மதியாரே; அதிகார

நிலைகொண்டுச் சொன்னாலும் நினையாரோ; நாளும்
குமிழ்ச்சிறப்பில் நிலைகொண்டு நிற்கும் "ஜான்";
அமிழ்தமாம் நாள்கரையும்; மனம் சோர்வடையும்;
மாறாதோ இந்நிலையே மன்னுபுகழ் ஏசுபிரானே!

-- கு.ப. அசோகன்,
மதிப்பீட்டு அதிகாரி.
19.10.2014 11.35 PM